தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (15.11.2024) பெரம்பலூரில், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகள், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் தற்போதைய நிலை ஆகியவை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக்கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அருண் நேரு, அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ. இரத்தினசாமி, பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கிரேஸ் லால்ரின்டிகி பச்சாவ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2024) செங்கல்பட்டு மாவட்டம், மேலக்கோட்டையூரில், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ட்ராக் சைக்கிளிங் போட்டி மைதானத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இந்திய சைக்கிளிங் சம்மேளனமும் ஒன்றிணைந்து நடத்தும் 76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டியினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் ஜெ.மேகநாதரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், கூடுதல் ஆட்சியர் செல்வி அனாமிகா, இந்திய சைக்கிள் கூட்டமைப்பின் பொது செயலாளர் மணிந்தர் பால் சிங், உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக் கழக துணைவேந்தர் முனைவர் எம்.சுந்தர், தமிழ்நாடு சைக்ளிங் சங்கத்தின் தலைவர் சுதாகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2024-25ஆம் ஆண்டிற்கான 9 தமிழறிஞர்களின்

நூல்கள் நாட்டுடைமை செய்து ரூ.90 லட்சம் நூலுரிமைத் தொகை!

தமிழ் வளர்ச்சி- செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்குகிறார்!

சென்னை, நவ.16-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களால் 2024-25ஆம் ஆண்டிற்கு 9 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்து நூலுரிமைத் தொகை (ரூபாய் 90.00 இலட்சம்) வழங்கப்படவுள்ளது.

தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 179 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூபாய் 14.42 கோடி நூலுரிமைத் தொகை தமிழ்நாடு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதில் முத்தமிறிஞர் கலைஞரின் ஆட்சிக்காலத்தில் மட்டும் 140 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு 9.71 கோடி நூலுரிமைத் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்பு நாளிதுவரை 22 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு ரூ.2.85 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக 2024-25-ஆம் ஆண்டில் இலக்கிய இலக்கணப் படைப்புகளாகவும் ஆய்வாகவும் தமிழன்னைக்குத் தொண்டறம் பூண்டு வாழ்ந்து மறைந்த தமிழறிஞர்களின் அனைத்துப் படைப்புகளையும் அறிவுப் பொதுவுடைமை செய்யும் வகையில் வாழும் தமிழறிஞர்களான முனைவர் ஆறு. அழகப்பன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (16 நூல்கள்) நாட்டுடைமையாக்கி ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும், முனைவர் இராமலிங்கம் (எ) எழில்முதல்வன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (27 நூல்கள்) நாட்டுடைமையாக்கி ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும் மற்றும் மறைந்த தமிழறிஞர்களான முனைவர் சோ.சத்தியசீலன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (16 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையரான திருமதி தனபாக்கியம் சத்தியசீலன் அவர்களுக்கு ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும், முனைவர் மா.ரா.அரசு அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (7 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையரான திருமதி அ. திரிபுரசுந்தரி அவர்களுக்கு ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும், பாவலர் ச. பாலசுந்தரம் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (29 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையர்களான பா.மதிவாணன், திருமதி பா.தமிழ்மணி ஆகிய இருவருக்கும் சேர்த்து ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும், முனைவர் க.ப.அறவாணன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (136 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையரான திருமதி தாயம்மாள் அறவாணன் அவர்களுக்கு ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும், முனைவர் க.த.திருநாவுக்கரசு அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (34 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையர்களான தி.அம்பலவாணன், திருமதி தி. அவ்வை, திருமதி தி.பூங்கோதை ஆகிய மூவருக்கும் சேர்த்து ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும், முனைவர் இரா.குமரவேலன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (8 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையரான திருமதி தமிழரசி குமரவேலன் அவர்களுக்கு ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும், கவிஞர் கா. வேழவேந்தன் அவர்களின் அனைத்துப் படைப்புகளையும் (16 நூல்கள்) நாட்டுடைமையாக்கி அவரின் மரபுரிமையரான திருமதி பானுமதி வேழவேந்தன் அவர்களுக்கு ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலையும் என மொத்தம் ரூ.90.00 இலட்சத்திற்கான காசோலைகள் 18.11.2024 (திங்கள்கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களால் வழங்கப்படவுள்ளது.

‘6வது தேசிய நீர் விருதுகள் 2025’

விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

நீர்வளத்துறை அறிவிப்பு!

சென்னை, நவ. 16-

நீர்வளத்துறை அறிவித்துள்ள அறிவிப்பில் “6வது தேசிய நீர் விருதுகள் 2025” க்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:

ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சக நீர் வளம், நதிகள் மேம்பாடு மற்றும் கங்கை புத்துயிர் ஆக்கத் துறை 6வது தேதிய நீர் விருதுகளுக்கான விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது. நீர் வள மேலாண்மையில் சிறந்த மாநிலம், சிறந்த மாவட்டம், சிறந்த உள்ளாட்சி அமைப்புகள், சிறந்த பள்ளி/கல்லூரி, சிறந்த நிறுவனம், சிறந்த ஊராட்சி அமைப்பு, சிறந்த நீரினை பயன்படுத்துவோர் சங்கம், சிறந்த தொழிற்சாலை மற்றும் சிறந்த சமுதாய அமைப்புகள் ஆகிய ஒன்பது வகைகளின் கீழ் விருதுகள் இந்தியாவில் நீர் வள மேலாண்மையில் ஒரு முன்மாதிரியான கலாச்சாராத்தை உருவாக்குவதை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதன் முறைகளை வெளிப்படுத்தும் நோக்குடன் 2018 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இதில் நீர் மேலாண்மையில் புதுமையான நடைமுறைகளை செயல்படுத்தும் அனைவரும் பங்கேற்கலாம். இதற்கான வழிகாட்டி முறைகளை பின்பற்றி 31டிசம்பர் 2024க்குள் உரிய விவரங்களுடன் விண்ணப்பங்கள் அளிக்கப்பட வேண்டும். மேலும் இது குறித்த விவரங்களை ராஷ்டிரிய புரஸ்கார் இணையத் தளமான (www.awards.gov.in) என்ற இணைய முகவரியில் அறிந்து கொள்ளலாம். இதில் நீர் பயனீட்டாளர்கள் அனைவரும் பங்கேற்குமாறு நீர் வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (15.11.24) சென்னை, வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான பழைய பொது பண்டக சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ சார்பில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகள் கட்டடம் கட்டுதல் தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர் ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, செயற்பொறியாளர் லோகேஸ்வரன், சென்னை குடிநீர் வழங்கல் துறை மேற்பார்வை பொறியாளர் ராதாகிருஷ்ணன், செயற்பொறியாளர் ஆனந்தகுமார், மாமன்ற உறுப்பினர் ராஜேஷ் ஜெயின் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2024) அரியலூரில் நடைபெற்ற அரசு விழாவில், அரியலூர் மாவட்டத்தில் 70.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10.141 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும், பெரம்பலூர் மாவட்டத்தில் 103.22 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 11,721 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு. பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல். திருமாவளவன், ஆ. ராசா, அருண் நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் எம். பிரபாகரன், கே. சின்னப்பா, க.சோ.கா. கண்ணன், அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ. இரத்தினசாமி, பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கிரேஸ் லால்ரின்டிகி பச்சாவ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2024) செங்கல்பட்டு மாவட்டம், மேலக்கோட்டையூர், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதன்மை விளையாட்டு மையத்தை நேரில் பார்வையிட்டு, விடுதியின் நவீன வருகைப்பதிவு, மாணவ மாணவியரிடம் விடுதியில் வழங்கப்படும் உணவின் தரத்தையும், விளையாட்டு பயிற்சி குறித்தும் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் ழில் நிறு நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் ஜெ.மேகநாதரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.